C.C 154/21
PW 2
பெயர் பரணி
தேதி 18.10.2022

**<u>சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைத்து உறுதிமொழி எடுத்து எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

போலிச் விசாரணையில் கதவை அடைப்பதற்காக வைத்திருந்த குச்சியை எடுத்து எண்ணெய் சட்டியை தட்டிவிட்டதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். குச்சியை கையில் வைத்து குடும்பத்தை அழித்துவிடுவேன் என போலிச் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். கடைக்கு வெளியில் வைத்து என் கணவரை எதிரி அடித்தார் என்ற விபரத்தை போலிச் விசாரணையில் கூறியுள்ளேன். சம்பவத்தின் போது வாய்தகராறு ஏற்பட்டு சத்தம் போட்டதால் அருகில் உள்ள கடைக்காரர்கள் வந்துவிட்டார்கள் என்றால் சம்பவம் முடிந்த பின்பு குழந்தை அழுத சத்தம் கேட்டு வந்தார்கள். யார் யார் வந்தார்கள் என்பதை நான் கவனிக்கவில்லை. எத்தனை பேர் என்பதையும் நான் கவனிக்கவில்லை. என் கணவரை எதிரி குச்சியால் தோள்பட்டையில் அடித்த காயப்படுத்தினார் என்ற விபரத்தை போலிச் விசாரணையில் கூறியுள்ளேன். எதிரி என் கடைக்குள் இருந்த செல்போனை எடுத்துக்கொண்டு நிற்காமல் சென்றுவிட்டார் என்ற விபரத்தை போலிச் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் எதிரியின் செல்போனை தான் எடுத்து சென்றதாக போலிச் விசாரணையில் கூறியுள்ளேன். எதிரி எங்கள் கடையில் வேலைக்கு கூப்பிட்டு மறுத்தார் என்றால் சரிதான். அதனால் அவரை பழிவாங்கவேண்டும் என்ற எண்ணத்தில் பொய்யாக புகார் கொடுத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி எண்ணெய் சட்டியை தட்டிவிடவில்லை என்றாலும் அதனால் என் கணவருக்கோ குழந்தைக்கோ காயம்ஏதுவும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் என் கணவருக்கும் வாய்தகராறு ஏற்பட்டு தகராறின் போது என் கணவரின் கை தெரியாமல் எண்ணெய் சட்டியில் பட்டு எண்ணெய் கொட்டிவிட்டது என்றும் அதில் என் குழந்தைக்கு காயம் ஏற்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.